உறுப்பினர் அவர்கள் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் தொடர்பாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்று வேண்டுகோள் வைத்திருக்கிறார்கள். இங்கே 10 வருவாய் கிராமங்கள்தான் இருக்கின்றன. 15 வருவாய் கிராமங்கள் வரையிலே ஒரு வருவாய் உள்வட்டம் இருக்கின்ற காரணத்தினாலே, வருகின்ற காலத்திலே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.*

திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் நலன் கருதி, மக்களின் முதல்வர் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, எதிர் வரும் காலங்களில் அப்படி ஒரு வருவாய் குறுவட்டம் அமைத்துத் தருவதற்குப் பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்த* **மாண்புமிகு** *அமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக எனது நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

15—

மேம்படுத்துதல்

***6230— திரு. வி.சி. ஆறுக்குட்டி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கவுண்டம்பாளையம் தொகுதி, பெரியநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியம், துடியலூர் ஆரம்ப சுகாதார நிலையத்தினை

2014 டிசம்பர் 4]

30 படுக்கைகள் கொண்டதாக மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய அரங்கில் தமிழ் மண்ணுக்கு விருது; தாயே! தாங்கள்தான் தமிழருக்கு ஆணி வேர் முதல் விழுதுவரை; (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் விருதுநகர் என்று ஒன்று உண்டு. ஆனால், விருதுகளின் தலைநகராய் தமிழ்நாடு ஆனது இன்று. விருது மேல் விருது வந்து தமிழகத்தைச் சாரும், அதைப் பெற்றுத் தந்த பெருமையெல்லாம் அம்மா அவர்களையே சாரும் என்று சொல்லி (மேசையைத் தட்டும் ஒலி) மக்களின் முதல்வர் அம்மா அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

கோயம்புத்தூர் மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள, துடியலூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அனுமதி வழங்கப்பட்டு, தற்பொழுது ரூ.88 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டு, பொதுப் பணித் துறையின் மூலம் பணிகள் முடிக்கும் தருவாயிலே நடந்துகொண்டிருக்கின்றன. விரைவிலே மக்கள் பயன்பாட்டிற்கு வரும் என்ற நல்ல செய்தியைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி அவர்கள்.*

திரு. வி.சி. ஆறுக்குட்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கவுண்டம்பாளையம் தொகுதிக்குட்பட்ட துடியலூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ரூ.88 இலட்சம் நிதி ஒதுக்கித் தந்து மக்களாட்சி நடத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றி சொல்லி அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.*

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன. அங்கே எந்த ஆரம்ப சுகாதார நிலையமும் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படவில்லை. அங்குள்ள இடையகோட்டை ஆரம்ப சுகாதார நிலையம் மிகவும் பின்தங்கிய பகுதியில் உள்ளது. அங்கே தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த மக்கள் அதிகமாக வசிக்கிறார்கள். தினந்தோறும் 200-க்கும் மேற்பட்ட புறநோயாளிகள் வந்து சிகிச்சை பெறுகின்றனர். உள்நோயாளிகள் சிகிச்சை பெறுவதற்கு போதுமான கட்டட வசதியில்லை. அங்குள்ள மக்கள் மேல்சிகிச்சைக்குச் செல்ல வேண்டுமென்றால், ஒட்டன்சத்திரம் அல்லது திண்டுக்கல்லுக்கு, சுமார் 35 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. இதையுணர்ந்து தலைவர் கலைஞர் அவர்களின் கடந்த ஆட்சிக் காலத்திலே இடையகோட்டை ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்டதாகத் தரம் உயர்த்தப்படும் என்று அரசாணை வெளியிடப்பட்டும், இதுவரை செயல்படுத்தப்படவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு பொது மக்கள் நலன் கருதி இடையகோட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11-30

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே ஆரம்ப சுகாதார நிலையங்களில் வரக்கூடிய நோயாளிகளுக்கு உரிய சிகிச்சையை அங்கேயே அளிக்கவேண்டும் என்பதற்காக, மக்களின் முதல்வர் அம்மா அவர்களுடைய சிந்தனையில் உதித்த சீர்மிகு திட்டம்தான் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்துகின்ற அற்புதமான திட்டம். இந்தத் திட்டத்திலே, ஏறத்தாழ 368 வட்டங்களிலே 228 ஆரம்ப சுகாதார நிலையங்கள் அம்மா அவர்களுடைய நல்லாட்சியிலே*

2014 டிசம்பர் 4]

தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. கடந்த மூன்று ஆண்டுகளில் 128 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு, சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பகுதியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தினையும் தரம் உயர்த்துவதற்கு அரசாணை பிறப்பிக்கப்பட்டு, நிதி ஒதுக்கம் செய்யப்பட்டு, பணிகள் தொடங்கப்படும் நிலையில் இருக்கின்றன. திண்டுக்கல் மாவட்டத்திலே இருக்கக்கூடிய அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும், ஓர் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படும். திண்டுக்கல் மாவட்டத்திலே மட்டுமல்ல, அனைத்து மாவட்டங்களிலேயும் இருக்கக்கூடிய அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும், ஓர் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படும் என்ற செய்தியையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)*

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

3. அலுவல் ஆய்வுக் குழு முடிவு குறித்து அவையில் எழுப்புதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) இல்லை. இன்றைக்கு சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுக்கவிருக்கிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், நான் நிற்கிறேன் அல்லவா? (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நான் நிற்கிறேன் அல்லவா? (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) இதெல்லாம் முறையல்ல. நேற்றைக்கே அலுவல் ஆய்வுக் குழுவில் இவையெல்லாம் பேசியாகிவிட்டது.*